தினகரன் 08.03.2



பாளை அரசு சித்த மருத்துவக்கல்லூரியில் முதலாம் ஆண்டு வகுப்புகளை தொடங்க கோரி நடைபெறும் தொடர் போராட்டத்தில் நேற்று அனைத்து கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஆலோசனை நடத்தினர்.

## பாளை சித்தா கல்லூரி பிரச்னை விஸ்வரூபம்

# அனைத்து கட்சி சார்பில் 20 பேர் கொண்ட குழு அமைப்பு

### 22ம் தேதி கல்லூரி முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

நெல்லை, மார்ச் 8: சித்தா கல்லூரி மாணவர் பிரச்னை தொடர்பாக அனைத்து கட்சியினர் அடங்கிய 20 பேர் கொண்ட போராட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் வரும் 22ம் தேதி அனைத்து கல்லூரி மாணவர்களை அழைத்து ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

பாளை அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் இளங்கலை, முதுகலை முதலாம் ஆண்டு வகுப்புகளை தொடங்க வலியுறுத்தி மாணவர்கள், பெற்றோர்கள் கடந்த பிப்.6ம்தேதி முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று 31வது நாளாக உள்ளிருப்பு போராட்டமும், 21வது நாளாக தொடர் உண்ணாவிரதமும் நடந்தது. நேற்றும் மாணவ, மாணவிகள் மத்திய மாநில அரசுகளிடம் கல்வி பிச்சை கேட்டு "திரு வோடு ஏந்தி" போராட் டம் நடத்தினர்.

இவர்களுக்கு ஆதரவாக அனைத்து கட்சி பிரதிநிதிகள் நேற்று அங்கு திரண்டனர். திமுக சார்பில் சுப. சீதாராமன், மதிமுக சார்பில் விஜயகுமார் பாக்கியம், கோபால், தேமுதிக சார்பில் வக்கீல் ஜெயபாலன், பாமக சார்பில் வியனரசு, காங்கிரஸ் சார்பில் அருள்ராஜ், சிவாஜி முத்துக்குமார், புறநகர் மாவட்டத்தை சேர்ந்த சுப்பிரமணியன், மார்க்சிஸ்ட் சார்பில் மாவட்ட செயலாளர் பாஸ்கர், தியாகராஜன், தமிழ் சான்றோர் பேரவை சுதர்சன், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் சார்பில் ரமேஷ், தேன்மொழி, முருகன், ஆதிதமிழர்பேரவை சார்பில் கலை கண்ணன், நாம் தமிழர் அமைப்பு சார்பில் சக்தி பிரபாகர், தமுமுக சார்பில் செய்யது சிராஜூத்தின் உள்ளிட்ட பல அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மாணவர் போராட்டம் தொடர்பாக அனைத்து கட்சி மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில் 20 பேர் கொண்ட போராட்ட குழு அமைக்கப்பட்டது. இக்குழுவினர் ராமசுப்பு எம்பி, மத்திய அமைச்சர் குலாம்நபி ஆசாத் ஆகியோரை சந்தித்து மாணவர் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. குழு சார்பில் வரும் 22ம் தேதி அனைத்து கல்லூரி மாணவர்கள், வியாபாரிகள் சங்கம், ஆட்டோ, லாரி ஓட்டுனர்கள் சங்கம் ஆகியோரை ஒருங்கிணைத்து பாளை சித்தா கல்லூரி முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து வரும் 25ம் தேதி பாளையில் மறியல் போராட்டம் நடத்தவும் போராட்டக்குழு முடிவு செய்துள்ளது.

# சித்த மருத்துவ மாணவர்களுக்கு 23 கட்சிகள், அமைப்புகள் ஆதரவு

## 22–ல் மிகப்பெரிய போராட்டம் நடத்த முடிவு


திருநெல்வேலி, மார்ச் 7: பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவ கல்லூரியில் போராட்டம் நடத்தும் மாணவ, மாணவிகளை பல்வேறு அரசியல் கட்சிகள் உள்பட 23 அமைப்புகளின் நிர்வாகிகள் புதன்கிழமை சந்தித்து தங்களது ஆதரவை தெரிவித்தனர். மாவட்டத்திலுள்ள அனைத்து கல்லூரிகள், அமைப்புகளுடன் சேர்ந்து இம்மாதம் 22-ம் தேதி மிகப்பெரிய போராட்டம் நடத்த அப்போது முடிவு செய்யப்பட்டது.

இக் கல்லூரியில் 2011-2012-ம் கல்வியாண்டுக்கான இளநிலை, முதுநிலை முதலாமாண்டு வகுப்புகளைத் தொடங்க வலியுறுத்தி கடந்த மாதம் 6-ம் தேதி முதல் மாணவ, மாணவிகள் தங்கள் பெற்றோருடன் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

31-வது நாளாக புதன்கிழமையும் இப்போராட்டம் நீடித்தது. 5 மாணவர்கள் உண்ணாவிரதத்திலும் மற்றவர்கள் உள்ளிருப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

மத்திய, மாநில அரசுகள் தங்களுக்கு கருணை காட்ட வேண்டும் என்று கைகளில் தட்டு ஏந்தியிருந்தனர்.

கோரிக்கை வாசகங்கள் அடங்கிய அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.



பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டத்துக்கு புதன்கிழமை ஆதரவு தெரிவித்த பல்வேறு கட்சி பிரமுகர்கள்.

இந்நிலையில் மாணவர்களது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும், அடுத்தக்கட்டமாக போராட்டத்தைத் தீவிரப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்க பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் போராட்டம் நடைபெறும் கல்லூரி வளாகத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் விவரம்: சுப. சீத்தாராமன் (திமுக), கிருஷ்ணன் (மதிமுக), முருகன் (சிபிஐ- எம்எல்), செல்வானந்தம் (நாம்தமிழர் கட்சி), பரத் (ஆதி தமிழர் பேரவை), மீனாட்சி சுந்தரம் (தேமுதிக), தேன்மொழி (அனைத்திந்திய முற்போக்கு பெண்கள் கழகம்), நா. அம்பேத்கர் (எஸ்.சி., எஸ்.டி. மத்திய அரசு ஊழியர்கள் கூட்டமைப்பு), எஸ். நிஜாமுதீன் (மனிதநேய மக்கள் கட்சி), செய்யது சிராஜுதீன் (தமுமுக), பொற்செழியன் (உலக தமிழ் கழகம்), வியனரசு (பாமக), பேட்ரிக் ஜோசுவா (மாணவர் காங்கிரஸ்), கார்த்திக் (விடுதலை சிறுத்தைகள்), அருள்ராஜ் (ஆட்டோ ஓட்டுநர் கூட்டமைப்பு), சிவாஜி முத்துக்குமார் (சிவாஜி காமராஜர் பேரவை) உள்ளிட்ட பல்வேறு கட்சி, அமைப்புகளின் நிர்வாகிகளும், மாணவர் போராட்டக் குழுவினரிடம் தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.

இதையடுத்து ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அப்போது 22-ம் தேதி மாவட்டத்திலுள்ள கல்லூரிகள், அமைப்புகளின் ஆதரவுடன் மிகப்பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தவும், தொடர்ந்து மறியல் போராட்டம் மேற்கொள்ளவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்த போராட்டத்தை நடத்த மாணவர்கள் மற்றும் அமைப்புகளில் இருந்து 20 பேர் குழு அமைக்கப்பட்டது.

அனைத்துக் கல்லூரிகளிலும் மாணவர்களை போராட்டத்துக்காக ஒருங்கிணைக்கவும், வர்த்தக அமைப்புகள், பல்வேறு வாகன ஓட்டுநர் சங்கங்களின் ஆதரவைப் பெறவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் மத்திய சுகாதாரத் துறை அமைச்சரைச் சந்தித்து முறையிடவும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

ஆதித்தமிழர் பேரவை, நெல்லை மாவட்டம்

**பாளை அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் BSMS, M.D.(s) முதலாமாண்டு வகுப்புகள் தொடங்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கக்கோரி 28.12.2011 அன்று அடையாள உண்ணாவிரத போராட்டம்**

---

அரசினர் சித்த மருத்துவ கல்லூரி, பாளையங்கோட்டை மற்றும் கோட்டார் அரசு ஆயுர்வேத கல்லூரியும் மத்திய அரசின் தர அனுமதி இன்றி முதலாமாண்டு வகுப்புகள் தொடங்கப்படாமல் உள்ளது இதில் BSMS- 100, BAMS - 50, MD (S) - 60 மொத்தம் 210 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் சென்னை சித்த மருத்துவ கல்லூரி மற்றும் மற்ற தனியார் சித்த மருத்துவ கல்லூரிகள் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் எப்படி AYUSH அனுமதி வழங்கியது? உலகஅளவிலும் இந்தியஅளவிலும் உருவாக்கப்பட்ட முதல் சித்த மருத்துவ கல்லூரி பாளை அரசு சித்த மருத்துவக் கல்லூரி இதற்கு தர அனுமதி வழங்க AYUSH மறுப்பது ஏன்? வேறு என்ன உள்நோக்கம் உள்ளது? AYUSH-ன் ஆய்வுகுழு ஆய்வு செய்ததில் உள்ள குறைகளை தமிழக அரசு கடந்த 3 மாதங்களில் சரி செய்து விட்டதாக தமிழக நல்வாழ்வு துறை அமைச்சர் மற்றும் நலவாழ்வு செயலர் கூறுகின்றனர். குறைகளை சரி செய்தும் அனுமதி மறுப்பது எந்த உள்நோக்கம் என்று தெரியவில்லை.

இதனால் முதலாமாண்டு BSMS & MD(S) மாணவர்களின் படிப்பு மற்றும் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது மாணவர்களாகிய நாங்களும் எங்கள் பெற்றோர்களும் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளோம். சென்னை சித்த மருத்துவ கல்லூரியில் M.D வகுப்புகளுக்கு வகுப்பு அறைகள்கூட இல்லாத நிலையிலும், O.P & I.P. நோயாளிகள் பாளை சித்த மருத்துவ கல்லூரியைவிட மிக குறைவாக உள்ளன. தனியார் சித்த மருத்துவ கல்லூரியில் மிக குறைவான பேராசிரியர்கள் குறைந்த உள்நோயாளர்(I.P.) படுக்கை வசதி, O.P & I.P. நோயாளிகள் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. இதற்கு AYUSH அனுமதி வழங்கி உள்ளது. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை?

நாங்கள் Health Minister, Health Secretary, இயக்குநர் (Director Indian Medicine & Homeopathy) இவர்களை நாங்கள் நேரடியாக சந்தித்து கேட்கும் போது நாங்கள் அனைத்து வசதியும் செய்துவிட்டோம். இது சம்பந்தமான வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது. இதற்கு மேல் எங்களால் எந்தவித உதவியும் செய்ய முடியாது.

மத்திய நலவாழ்வுதுறை அமைச்சர் உயர்திரு. குலாம்நபிஆசாத் மற்றும் AYUSH பொறுப்பாளர்கள் மற்றும் CCIM உறுப்பினர்கள் சந்தியுங்கள் என்று பொறுப்பற்ற பதில்களை கூறுகின்றனர். மேலும் AYUSH ஐ எதிர்த்து உயர்நீதி

பெற்றோர் :- இசக்கிமுத்து — 9788127784

மாணவர் :- மரு - ப.கி. இரமேசு — 9994761237

மன்றத்தில் வழக்கு போடுங்கள் என்றார்கள். CCIM-ல் உள்ள சித்த மருத்துவ உறுப்பினர்களும் எங்களுடைய பிரச்சனைகளுக்கு உரிய தீர்வை சொல்லாமல் பொறுப்பற்ற பதில்களை கூறுகின்றனர்.

எங்களுக்கு கலந்தாய்வு செய்து தேர்வு செய்ததும், M.D.(s) நுழைவு தேர்வு நடத்தி கலந்தாய்வு மூலம் தேர்வு செய்ததும் தமிழக அரசு தான். எங்களுடைய படிப்பு கடந்த 3 மாதங்களாக தாமதமாகி உள்ளது. இதற்கு உரிய தீர்வுக்கான உத்திரவாதத்தை யாரும் வழங்கவில்லை.

நம் தமிழ்நாட்டின் பாரம்பரிய மருத்துவமான சித்த மருத்துவம் மிகவும் அவல நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

**இந்நாள்வரை கடந்த 47 வருடங்களாக எந்த அடிப்படையில் முதலாமாண்டு சேர்க்கை நடைபெற்றது அப்போது வசதி இருந்ததா? இப்போது ஏன் இல்லை.**

மறைந்த முன்னாள் முதல்வர் M.G.R. அவர்களுக்கு சித்த மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டபோது சித்த மருத்துவத்தின் சிறப்பை உணர்ந்து அதன் காரணமாக BIM என்ற சித்த மருத்துவ படிப்பு BSMS என்று மாற்றப்பட்டு பல்வேறு அடிப்படை வசதிகள் பாளை சித்த மருத்துவ கல்லூரிக்கு செய்து தரப்பட்டது.

எங்கள் பிரச்சனைக்கு உரிய தீர்வு செய்ய வேண்டியவர்களே பொறுப்பற்ற பதில்களை சொல்லும் போது சாதாரண மக்களான எம்பெற்றோர்கள் என்ன செய்ய முடியும். வழக்கு என்று அலைய முடியுமா? பாளை சித்த மருத்துவ கல்லூரியில் நாள்தோறும் வெளி நோயாளிகள் 600-க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று செல்கின்றனர். 200-க்கும் மேற்பட்ட உள்நோயாளிகள் பகுதியில் அனுமதி பெற்று சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏற்கனவே சம்பந்தப்பட்ட துறைக்கு கடந்த 15.12.2011 முதல் **தந்தி** மற்றும் **FAX** அனுப்பி உள்ளோம். முதல்வர் தனிபிரிவிற்கு உரிய முறையில் எங்கள் பிரச்சனை சொல்லி **தந்தி** மற்றும் FAX அனுப்பி உள்ளோம். இதுவரை எந்தவிதமான சாதகமான பதில்கள் வராத நிலையில் நாங்கள் மத்திய, மாநில அரசுகளின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், எங்களது நிலைமையை எடுத்துரைக்கும் விதமாகவும் இன்று ஒருநாள் (28.12.2011) காலை 10 மணி முதல் 5 மணி வரை இந்த அடையாள உண்ணாவிரத போராட்டத்தை நடத்த முடிவு செய்தோம்.

எனவே மாண்புமிகு. தமிழக முதல்வர் அம்மா அவர்கள் எங்களுக்கு உரிய நடவடிக்கை எடுத்து விரைவில் வகுப்புகள் தொடங்க ஆணையிடுமாறு தாழ்ந்த பணிவுடன் மாணவர்களாகிய நாங்களும் எம்பெற்றோர்களும் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள்